மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.10/2012

2024–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லோகா(Dw2) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.30.01.2025</u>

<u>பி.வா.சா.2</u>

**<u>குறுக்கு விசாரணை :–</u>**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு வழக்கறிஞருக்கு நான் தான் விபரம் சொன்னேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என்னுடைய சொத்தை அவரது சொத்து என்று வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்து உட்பட மொத்த சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து உட்பட மொத்த சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 471 ஆகும். மொத்த சொத்தும் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் அது எனக்கு தெரியாது. எனது கணவர் பெயர் மார்சிலின் டிட்டோ என்றால் சரிதான். அவர் தான் 5ம் பிரதிவாதியிடம்இருந்து 471/10b சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு அந்த சொத்து எப்படி பாத்தியம் என்றால் அவருக்கு கிரையப் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். எவ்வளவு சொத்து யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் வின்செண்ட் மச்சாது மற்றும் ஒரு நபரிடம் இருந்து 5ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார். எவ்வளவு சொத்தை வாங்கினார் என்றால் ஞாபகம் இல்லை. நாங்கள் எவ்வளவு சொத்தை அவரிடம் இருந்து கிரையம் வாங்கினோம் என்றால் 7 1/2 செண்ட் வாங்கினோம். எங்களுக்கு கிரையம் கொடுக்கும்போது சர்வே எண்.471/10B என்று சொல்லி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வின்செண்ட் மச்சாதுக்கு எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது என்றால் ஞாபகம் இல்லை. நான் வாங்கிய சொத்து என்பது தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்தை கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். ஹென்றி வழக்கு போட்டுள்ள சொத்திற்கும், எங்களுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல அவர் எனது சொத்திற்கு தான் வழக்கு போட்டுள்ளார். வாதி சர்வே எண்.471/1A1A ல் கண்ட சொத்திற்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்தை தான் 5ம் பிரதிவாதி வின்செண்ட் மச்சாதுவிடம் கிரையம்

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.30 18:05:05 +0530

வாங்கினார் என்றால் சரிதான். அந்த சொத்தில் தான் எனக்கு 7 1/2 செண்ட் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் வாங்குவதற்கு முன்பு 5ம் பிரதிவாதிக்கு சொத்து எப்படி பாத்தியம் என்பதை காண்பிப்பதற்கு பட்டாவோ, வேறு எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். தசரதன் பெயரில் சர்வே எண்.471/10B ல் காட்டக்கூடிய பட்டா எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் 5ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார். நான் இந்த வழக்கில் ஆணையர் நியமணம் கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் நான் கிரையம் வாங்கிய 7 1/2 செண்டை பொறுத்து பார்வையிடவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தசரதன் கிரையம் வாங்கிய மொத்த சொத்தையும் பார்வையிடுவதற்காக, வாதி வழகது போட்டுள்ள சொத்தை பார்வையிடுவதற்கோ மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனது 7 1/2 செண்டை பார்வையிடுவதற்கு மனு செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன்படி தான் ஆணையர் பார்வையிட்டு ஆணையர் எனது வீடு இருப்பது சம்பந்தமாக அறிக்கை வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கும், எனக்கோ, எனது முன்பாத்தியஸ்தர்களுக்கோ எந்தவித சம்பந்தமும், உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு 5 ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு வடக்கே கிரையம் வாங்கிய சொத்தில் தான் பாத்தியம் உண்டு தவிர தாவா சொத்தில் எனக்கு எந்தவித பாத்தியம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக எனக்கு தெரியாமல் நான் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்தை பொறுத்து நானோ, எனது முன்பாத்தியஸ்தர்களோ மறுப்பதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது வாதியின் முன்பாத்தியஸ்தரான சுவக்கின் அந்தோணியம்மாளிடம் இருந்து வாதியால் 08.06.1984ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வாதி வாங்கிய 3 ஏக்கர் சொத்தில் வடக்கேயுள்ள 1 ஏக்கரை 3ம் பிரதிவாதி எத்தே பாதர் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த 1 ஏக்கரை தான் தசரதன் கிரையம் வாங்கி எனக்கு 7 1/2 செண்ட் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். அதனால் வாதி கைவசமுள்ள 2ஏக்கர் தாவா சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை:-</u>

மொத்த சொத்தில் எந்த பக்கம் கிரையம் வாங்கிய அனுபவம் செய்துவருகிறோம் என்றால் வடக்கு பக்கம் அனுபவம் செய்து வருகிறோம்.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.30 18:05:11 +0530